1986 ஏப்ரல் 26]

தற்போது அறநிலையத் துறையிலிருந்து ஏதாவது நிதி ஒதுக்கினால் நானும் பொதுமக்களிடம் சென்று நிதி வசூல் செய்து இந்தத் திருப்பணியை மிகவும் நல்லமுறையில் நடத்தமுடியும் என்பதற்காகத்தான் நமது அறநிலையத் துறை மூலமாக கொஞ்சம் நிதியாவது ஒதுக்கிக் கொடுங்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன். அமைச்சர் அவர்கள் கூறிய ஆலோசனையின்பேரில் நானும் முன் நின்று இந்தத் திருப்பணியை நடத்துவதற்கு உதவியாக இருப்பேன் என்று இந்தத் தருணத்தில் கூறிக்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசு நிதியிலிருந்து ஏதாவது இந்த ஆலயத்திற்கு ஒதுக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஜயேந்திர சரஸ்வதி அவர்களின் 50-வது ஆண்டு விழாவினையொட்டி நடைபெறவேண்டிய திருப்பணி என்கிற அந்தப் பட்டியலிலிருந்து இதை விலக்கிக் கொள்கிறார்களா அல்லது அந்தக் குழுவினரே இந்தத் திருப்பணியை தொடங்க இருக்கிறார்களா என்ற விவரத்தைத் தெரிவித்து அந்தத் திருப்பணிக்கு எவ்வளவு தேவை, எவ்வளவு திருப்பணி நடைபெறவேண்டும் என்கிற விவரத்தையும் திட்டவட்டமாக அறநிலையத் துறைக்குத் தெரிவித்தால் அதற்கு பொதுமக்கள் சார்பில் எவ்வளவு நீங்கள் போடுகிறீர்கள் என்ற விவரத்தையும் தெரிவித்தால் எப்படியும் அந்தத் திருப்பணியை நிறைவேற்றி வைப்பதற்கு அறநிலையத் துறை தன்னாலான அத்தனை உதவியையும் முடிந்த அளவிற்கு அதற்குச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கிரீன்வேஸ் சாலையில் தந்தை பெரியாருக்கு நினைவுச் சின்னம்.

575—(*வினா எண். 5756)—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, மயிலாப்பூர் வட்டம், கிரீன்வேஸ் சாலையில் தந்தை பெரியாருக்கு நினைவுச் சின்னம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பரிசீலனையில் உள்ளது.

(ஆ) மாநாட்டு அரங்கம் ஒன்று கட்டுவதற்காக நிலத்தை, செய்தி மற்றும் சுற்றுலாத் துறைக்கு மாற்றுவதற்கான மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

[1986 ஏப்ரல் 26

திருமதி பா. வளர்மதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நினைவுச் சின்னத்தை எழுப்புவதற்கு அரசாங்கம் ஒதுக்கியுள்ள மொத்தத் தொகை எவ்வளவு என்பதை அறிய விரும்புவதோடு இந்தப் பணி எப்போது துவங்கும் என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் நூற்றாண்டு விழா குழுவின் சார்பில் நினைவுச் சின்னங்கள் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய பல்வேறு குறிப்புகள் அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டன. அதிலே தந்தை பெரியாருடைய நினைவாக அமைக்கப்பட வேண்டிய மாநாட்டு அரங்கம் ஒன்றும் அவர்கள் பரிந்துரை செய்தார்கள். அதை அரசாங்கம் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறது. அப்போது அதற்கான இடத்தை ஒதுக்கீடு செய்து எந்த இடத்திலே இது கட்டப்படுகிறது என்று தீர்மானித்ததற்குப் பிறகுதான் அதிலே எப்படிப்பட்ட மாநாட்டு அரங்கம் கட்ட முடியும், எப்படி மாநாட்டு அரங்கத்தைக் கட்டுவது என்று முடிவு செய்தால், அதற்கு எவ்வளவு செலவு செய்வது என்று தீர்மானிக்க முடியும் என்று அரசாங்கம் இந்தத் துறைக்கு தெரிவித்திருக்கிறது. ஆகவே இந்த இட ஒதுக்கீடு நடைபெற்று முடிந்ததற்குப் பிறகுதான் அந்த மண்டபம் எப்படி அமையும், அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதை அரசாங்கம் முடிவு செய்யும்.

திருமதி பா. வளர்மதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நினைவுச் சின்னம் எழுப்புவதற்கு மைலாப்பூரில் க்ரீன் வேஸ் ரோடில் இடம் இருப்பதாக ஏற்கனவே அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். இதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்து எப்படியாவது அந்த நினைவுச் சின்னம் மைலாப்பூரிலேயே ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து தந்தை பெரியார் அவர்கள் தன்மானத்தையும் பகுத்தறிவையும் இந்த நாட்டுக்குப் போதித்தவர்கள். அவர்களது சிறந்த நூல்களை உள்ளடக்கிய தமிழகத்திலேயே மிகச் சிறந்த நூல் நிலையத்தை அந்த நினைவுச் சின்னத்தில் ஏற்படுத்துவதற்கு அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, க்ரீன்வேஸ் சாலையும் காமராஜர் சாலையும் சந்திக்கும் இடத்தில் மீன் வளத் துறை வசமுள்ள 18 ஏக்கர் நிலத்தையும் இந்த நிலத்தையொட்டியுள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான இடம் முழுவதையும் பெரியார் மாநாட்டு அரங்கு அமைப்பதற்காக ஒதுக்கீடு செய்யவேண்டும் என்ற கருத்து விவாதத்திலே இருக்கிறது. அதைப்பற்றி இறுதி முடிவு எடுத்ததற்குப் பிறகுதான் மற்றப் பிரச்னைகளைப் பரிசீலிக்க முடியும்.

1986 ஏப்ரல் 26]

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் பெயரால் அறிவியல் ஆய்வுக்கூடம் நிறுவவும் பெரியார் சொன்ன முற்போக்குக் கருத்துக்களை ஆய்வு செய்ய விரும்பி முன்வருவோருக்கு பல்கலைக்கழகத்தில் வாய்ப்பளிக் கப்படுமா? மேலும் பெரியார் இதயம் எங்கேயிருக்கிறது? பெரியார் இதயத்தை எல்லோரும் பார்ப்பதற்கு வழிவகை செய் யப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலை வர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

நலிந்த தொழிற்சாலைக்கான வரையறை.

444—(*வினா எண். 1831)—திரு. செ. செம்மலை: மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 'நலிந்த தொழிற்சாலை' (Sick Industry) என்பதற்கு தற்போது உள்ள அளவுகோலை மாற்றி அமைக் கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) மற்றும் (ஆ) இல்லை.

(முற்பகல் 9-30).

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட நலிந்த ஆலைகளுக்கு உதவி செய் வதற்காக ''தமிழ்நாடு ரிலீப் அன்டர்டேக்கிங் ஆக்ட்'' உரு வாக்கப்பட்டு, அதன்படி நலிவுற்ற ஆலைகளுக்கு உதவிகள் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, அந்த அடிப்படையில் எத் தனை ஆலைகள் அரசின் உதவி கோரி வந்துள்ளன என்ற விவ ரத்தை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இது வரை நலிவுற்ற 43 சிறு தொழில்களுக்கு 71 இலட்சம் ரூபாய் உதவிப் பணம் வழங்கப்பட்டிருக்கின்றது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தபின் காப்பதை விட, வருமுன் காப்பது மேல் என்ற அடிப்படையில் நலிவுற்ற பிறகு உதவுவது என்பதை விட